அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அரையாண்டுத்தேர்வு

# 2021/2022

# தமிழ்

## ஆண்டு 10

மாதிரித் தேர்வுத்தாள்

| | |
|---|---|
| **நேரம்:** 150 மணித்துளிகள் | **மொத்தப்புள்ளிகள்:** 80 (எழுதுதல் 65 புள்ளிகள், வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் 15 புள்ளிகள்) |
| **நாள்:** சனிக்கிழமை | **பக்கங்கள்:** 16 |

**பெயர்:**

**தமிழ்ப்பள்ளி:**

மாதிரிச் சேர்வுத்தாள்

## பகுதி 1 – எழுதுதல்

**1. மிகப்பொருத்தமான விடைக்குரிய கட்டத்திற்குள் புள்ளடி இடுக.**

1 2 3 4

1. சோழர் காலத்தில் தோற்றம் பெற்ற காப்பியங்கள்
   1. வளையாபதி, சீவகசிந்தாமணி
   2. சிலப்பதிகாரம், மணிமேகலை
   3. யசோதரகாவியம், சூளாமணி
   4. மணிமேகலை, நீலகேசி

2. 1993 ஆம் ஆண்டு அமைதிக்கான நோபல்பரிசு பெற்றவர்
   1. மகாத்மாகாந்தி
   2. ஆபிரகாம்லிங்கன்
   3. நெல்சன்மண்டேலா
   4. நெப்போலியன்

3. ய், ர், ல், வ், ழ், ள் என்பன
   1. வல்லின மெய்கள்
   2. இடையின மெய்கள்
   3. மெல்லின மெய்கள்
   4. உயிர்மெய்

4. கறையானின் வாழிடம் புற்று போல எலியின் வாழிடம்
   1. கூடு
   2. குகை
   3. வளை
   4. வலை

5. மொழிக்கு இறுதியில் வராத எழுத்துகள்
   1. அ, ஆ, ர்
   2. க், ச், ட்
   3. உ, ஊ, ய்
   4. இ, ஈ, ண்

6. மாதவியின் ஆடல் திறனுக்குப் பரிசாகக் கொடுக்கப்பட்டது
   1. முத்துமாலை
   2. தலைக்கோல்
   3. இசைக்கருவி
   4. அணிகலன்

7. தமிழிலக்கிய வரலாற்றில் பொற்காலமென அழைக்கப்பெற்ற காலம்
   1. சோழர்காலம்
   2. நாயக்கர்காலம்
   3. பல்லவர்காலம்
   4. களப்பிரர்காலம்

8. திருக்குறள் என்னும் நூல்
   1. அகநூல்
   2. அறநூல்
   3. பக்திநூல்
   4. காப்பியம்

மாதிரித் தேர்வுத்தாள்

**1 2 3 4**

9. அ∴றிணை, பலவின்பால், படர்க்கை, இறந்தகால வினையை உணர்த்தும் சொல்
   1. பறக்கும்
   2. பறந்தன
   3. பறக்கின்றன
   4. பறந்தது

10. குமரன் மண்ணை மண்வெட்டியால் கொத்தினான். இச்சொல்லியத்தில் மண்வெட்டி என்பது
    1. இயற்பெயர்
    2. காரணப்பெயர்
    3. இடுகுறிப்பெயர்
    4. காரணஇடுகுறிப்பெயர்

11. 'மகனே! நீ நன்றாகப் படி' என அம்மா எனக்கு அறிவுரை வழங்கினார். இச்சொல்லியத்தில் படி என்பது
    1. ஏவல்வினை
    2. வியங்கோள்வினை
    3. செயப்பாட்டுவினை
    4. தன்வினை

12. கருங்குழல் என்பதன் சொற்பிரிப்பு வடிவம்
    1. கறுப்பு + குழல்
    2. கரு + குழல்
    3. கருமை + குழல்
    4. கருங்கு + குழல்

13. இன்பம் நிறைந்த வாழ்வை எல்லோரும் விரும்புவர். இதில் இன்பம் என்பதன் எதிர்ப்பொருட்சொல்
    1. மகிழ்ச்சி
    2. களிப்பு
    3. துன்பம்
    4. உவகை

14. தாய் தன் மகளைக் கண்ணுங்கருத்துமாக வளர்த்தார். இதில் கண்ணுங்கருத்தும் என்பது
    1. அடுக்குத்தொடர்
    2. அடுக்கிடுக்குத்தொடர்
    3. இரட்டைக்கிளவி
    4. இணைமொழி

15. பால் காட்டும் பகுசொல் உறுப்பு
    1. பகுதி
    2. விகுதி
    3. இடைநிலை
    4. சாரியை

16. வளவன் தனது நண்பர்களுடன் சேர்ந்து பணத்தை வீண்செலவு செய்தான். இதில் வீண்செலவு என்பதைக் குறிக்கும் மரபுத்தொடர்
    1. ஆறப்போடுதல்
    2. ஈடுகட்டுதல்
    3. ஆழம்பார்த்தல்
    4. அள்ளியிறைத்தல்

பரீட்சைத் தேர்வுத்தாள்

1 2 3 4

17. பொதுமொழியாக வரும் சொல்
   1. அறம் செய்
   2. காற்று
   3. தங்கை
   4. யானை

18. இல்லறத்தைத் துறந்து இறைவனை நினைந்து வாழ்தல்
   1. இல்லறம்
   2. வீடு
   3. குடும்பம்
   4. துறவறம்

19. செவ்வியல் கலைகளுள் ஒன்று
   1. நெசவு நெய்தல்
   2. இரும்பை உருக்குதல்
   3. பரதக்கலை
   4. மட்பாண்டம் வனைதல்

20. தொல்காப்பியத்தில் பேச்சு வகைகளுள் ஒன்றாகக் குறிப்பிடப்படுவது
   1. பருகுதல்
   2. செப்புதல்
   3. தின்னுதல்
   4. கொறித்தல்

21. மகிழன் மிக நல்லவன். இச்சொல்லியத்தில் நல்லவன் என்பது
   1. குறிப்புவினை
   2. தெரிநிலைவினை
   3. பிறவினை
   4. செய்வினை

22. தந்தை மகனின் திறமையை எண்ணிக் கழிபேருவகை அடைந்தார். இச்சொல்லியத்தில் கழி என்பது
   1. பெயர்ச்சொல்
   2. வினைச்சொல்
   3. இடைச்சொல்
   4. உரிச்சொல்

23. நெல் வயலை வெள்ளை உழுதது. இதில் பண்புப்பெயராக அமைந்த சொல்
   1. வயல்
   2. வெள்ளை
   3. கலப்பை
   4. நெல்

24. கல் + தூண் என்பதன் புணர்ச்சி வடிவம்
   1. கல்தூண்
   2. கல்த்தூண்
   3. கற்றூண்
   4. கற்தூண்

25. குழலி மாறனுக்குத் தங்கை. இச்சொல்லியத்தில் இடம்பெற்றுள்ள வேற்றுமை
   1. முதலாம் வேற்றுமை
   2. இரண்டாம் வேற்றுமை
   3. மூன்றாம் வேற்றுமை
   4. நான்காம் வேற்றுமை

(25×1=25 புள்ளிகள்)

**2. கீழ்க்காணும் வினாக்களுள் நீர் விரும்பிய ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு உறுதிப்பொருள்களையும் கூறும் இலக்கியங்களை எவ்வாறு அழைப்பர்?

2. மக்கள் புலம்பெயர்ந்து செல்வதற்கான காரணங்கள் இரண்டு எழுதுக.

3. ஆடற்கலையில் வேத்தியல், பொதுவியல் என்று கூறப்படுவது யாது?

4. “இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை” இக் குறளின் பொருளினை எழுதுக.

5. ‘வீழ்ந்தான், பக்கம்’ - இச்சொற்களின் மெய்ம்மயக்க வகையை எழுதுக.

வீழ்ந்தான்:

பக்கம்:

6. பனிகாலத்தில் பூம்பனியைப் பள்ளிச்சிறுவர்கள் எறிந்து விளையாடுவார்கள். இச்சொல்லியத்தின் சொல்லிய உறுப்புகளையும் அடைமொழிகளையும் எழுதுக.

7. அடுக்குத்தொடர், அடுக்கிடுக்குத்தொடராக எவ்வாறு மாற்றமடைகிறது என்பதை எடுத்துக்காட்டுடன் எழுதுக.

(5×2=10 புள்ளிகள்)



மாதிரித் தேர்வுத்தாள்

**3. கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

கல்லைத்தான் மண்ணைத்தான் காய்ச்சித்தான்
குடிக்கத்தான் கற்பித் தானா?
இல்லைத்தான் பொன்னைத்தான் எனக்குத்தான்
கொடுத்துத்தான் இரட்சித் தானா?

அல்லைத்தான் சொல்லித்தான் ஆரைத்தான்
நோவத்தான் ஐயோ எங்கும்
பல்லைத்தான் திறக்கத்தான் பதுமத்தான்
புவியில்தான் பண்ணி னானே!

- இராமச்சந்திர கவிராயர்

மாதிரித் தேர்வுத்தாள்

1. இப்பாடலில் மேலோங்கியுள்ள உணர்வு யாது? (1 புள்ளி)

________________________________________

________________________________________

2. எதனைக் கற்பிக்கவில்லை என்று கவிஞர் கூறுகிறார்? (1 புள்ளி)

________________________________________

________________________________________

3. இப்பாடலிலிருந்து பின்வருவனவற்றை எழுதுக. (2x1=2 புள்ளி

   1. இடைச்சொல் ____________________

   2. வினா எழுத்துப் பெற்றசொல் ____________________

**4. கீழ்க்காணும் தலைப்பு அல்லது படத்தினைத் தெரிவுசெய்து ஆறு வரிகளுக்குக் குறையாமல் கவிதை எழுதுக.**

1. கடல்
2. 

(4 புள்ளிகள்)

**5. கீழ்க்காணும் பந்தியைப் வாசித்து, மூன்றிலொரு பங்காகச் சுருக்கி எழுதுக.**

கணினி வழி மொழிப்பாடம் கற்றல் முறையில் மாணவர் தாமே கற்றலை நிகழ்த்துவர். எனவே, இது தனிநபர் கற்றல் அல்லது தனிப்பட்ட கற்றல் என்றும் அழைக்கப்படும். தனிப்பட்ட கற்றல் என்பது கற்பவருக்கும் கற்றலுக்குமான உறவைப் பலப்படுத்துவதாகும். கல்வியில் ஏற்பட்டுள்ள மாற்றங்களில் தனிப்பட்ட கற்றல் முறை இன்றியமையாத ஒன்றாக அமைகிறது. இது மாணவர்கள் தங்களுக்கு முடிந்த அளவில் தாமாகக் கற்கும் பயிற்சியை அளிக்கிறது. இன்றைய காலகட்டத்தில் அனைத்துப் பிரிவு மாணவர்களும் ஒரே வகுப்பறையில் உள்ளனர். அத்தகைய சூழலில் அனைத்து மாணவர்களுக்கும் ஓர் ஆசிரியரால் சிறப்பாகக் கற்றுக் கொடுக்க முடியாது. இந்நிலையில் தனிநபர் கற்றல் என்பது புதிய முறையில் மாணவர்கள் தாமாகக் கற்கும் பழக்கத்தை வழங்கும்.

________________________________________

(4 புள்ளிகள்)

மாதிரித் தேர்வுத்தாள்

**6. கீழ்க்காணும் பந்தியை உமது வாழிட மொழியில் மாற்றி எழுதுக.**

விளையாட்டு என்பது பொழுதுபோக்காகவும், மகிழ்ச்சிக்காகவும் சிலவேளைகளில் கற்பித்தல் நோக்கத்திற்காகவும் நடத்தப்படும் கட்டமைப்புக் கொண்ட ஒரு செயற்பாடு ஆகும். விளையாட்டு சில சமயங்களில் வேலையுடன் தொடர்புடையது போல் காணப்படுகிறது. ஆனால், வேலை ஊதியத்திற்காகச் செய்யப்படுவதாகும். விளையாட்டு ஒரு கலை என்றும் குறிப்பிடப்படுவது உண்டு. ஆனால், கலையைப் போல் உணர்வுகளை வெளிப்படுத்தும் ஒன்றாக விளையாட்டு இருப்பதில்லை. தொழில்முறை விளையாட்டு வீரர்களுக்கு விளையாட்டு வருமானத்திற்கான ஒரு தொழிலாகவே உள்ளது. விளையாட்டு வீரர்கள் விளையாட்டுகளைப் போட்டியாக விளையாடுகின்றனர். இதனால் வெற்றி தோல்வியை சமமாக மதிக்கின்றனர்.

(3 புள்ளிகள்)

**7. கீழ்வருவனவற்றுள் ஒன்றினைப்பற்றி 175 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

1. தமிழிலக்கிய வரலாற்றில் சோழர்காலம்
2. தமிழர் புலப்பெயர்வு
3. தாய்மொழிக்கல்வியால் பெற்ற பயன்களும், தாய்மொழியைப் பேணுவதற்கு ஆற்றவேண்டிய பணிகளும்

- தாய்மொழியின் சிறப்புகள்
- தாய்மொழிக் கல்வியின் தேவையும் பயனும்
- தாய்மொழிக்கு நீங்கள் ஆற்றவேண்டிய பணிகள்

(15 புள்ளிகள்)

மாதிரித் தேர்வுத்தாள்

மாதிரிக் கேள்வித்தாள்

மாதிரித் தேர்வுத்தாள்

## பகுதி – 2

## வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்

**1. கீழ்க்காணும் பந்தியைப் வாசித்து, வினாக்களுக்கு விடை எழுதுக.**

இலக்கியம் மக்கள் வாழ்க்கையில் இருந்து மலர்கிறது. எனவே, இலக்கியத்திற்கும் வாழ்க்கைக்கும் மிக நெருங்கிய தொடர்பு இருந்து வருகிறது. இலக்கியத்தின் பாடுபொருளாக அமைவதும் வாழ்க்கையே. வாழ்க்கைமுறையே பண்பாட்டை வெளிப்படுத்தும் வாயில். தமிழ்ப்பண்பாட்டின் கூறுகளை இனம் காண்பதற்குத் தமிழ் இலக்கியங்கள் சான்றாக அமைந்துள்ளன. “கவிதை என்பது மெய்ம்மையின் நகல்” என்று பிளேட்டோ எனும் அறிஞர் கூறியுள்ளார். வாழ்க்கையை நகல் எடுத்துக் காட்டுவது இலக்கியம். இலக்கியம், படைக்கப்படும் காலத்தில் வாழ்ந்து, மக்களின் பண்பாட்டை எடுத்துரைக்கும். தமிழகத்தில் ஒரு நீண்ட நெடிய தமிழ் இலக்கிய மரபு இருந்திருக்கிறது என்பதற்குச் சான்றாகத் திகழ்பவை இலக்கியங்கள். இவ்விலக்கியங்களைப் படைத்த புலவர்கள், தாம் வாழ்ந்த சூழலை மிகவும் சிறப்பான முறையில் எடுத்துக்காட்டியுள்ளனர். ஐவகை நிலங்களில் வாழ்ந்த மக்கள், அவர்களின் உணவுகள், தொழில்கள், கலைகள், பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், வாழ்க்கைமுறை ஆகியவற்றைத் தாம் இயற்றிய இலக்கியங்கள் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளனர். பழந்தமிழர்கள் எவ்வளவு சிறப்புக்குரிய பொருள் கிடைத்தாலும், தவறான செயல்களில் ஈடுபடமாட்டார்கள். பொதுநலத்திற்காகவே எதையும் செய்வார்கள். அவ்வாறே செய்யவேண்டும் என்ற உயர்ந்த குறிக்கோளுடன் வாழ்ந்திருக்கிறார்கள். இது அவர்களது பண்பாட்டுச் சிறப்பை வெளிப்படுத்துகிறது.

1. தமிழ் இலக்கியங்கள் எதற்குச் சான்றாக அமைந்துள்ளன?

_______________________________________________

2. இலக்கியங்கள் பற்றிக் கூறிய அறிஞர் யார்? அவர் கூறிய கருத்து யாது?

_______________________________________________

3. புலவர்கள் தாம் இயற்றிய இலக்கியங்கள் வாயிலாக எவற்றை வெளிப்படுத்தி உள்ளனர்?

_______________________________________________

4. பழந்தமிழர்களின் உயர்ந்த குறிக்கோள் யாது?

_______________________________________________

_______________________________________________

5. இக்காலத்திலும் தமிழர்கள் பொதுநலத்திற்காகவே வாழ்கிறார்கள் இக்கூற்றுப் பற்றிய உமது கருத்தை எழுதுக.

_______________________________________________

_______________________________________________

(5×2=10 புள்ளிகள்)

மாதிரித் தேர்வுகள்

**2. கீறிட்ட இடங்களைப் பொருத்தமான சொற்களால் நிரப்பி விளம்பரத்தை நிறைவு செய்க.**

| | | |
|---|---|---|
| பன்மடங்காக | நோய்த்தொற்று | அறுசுவை |
| பணிச்சுமை | நாள்தோறும் | |

**'சுவையூற்று' பல்சுவை உணவகம்**

தமிழர்களின் தனித்துவமான ____________________ உணவுகளை உண்டு மகிழ உங்களின் முதல் தர தெரிவு 'சுவையூற்று'!

கோவிட் 19 ____________________ பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றி புலம்பெயர் மண்ணில் புதுப்பொலிவுடன்!

உங்களின் ____________________, நேரப்பற்றாக்குறை போன்றவற்றைக் கருத்தில் கொண்டு உங்களின் வீட்டுக்கே உணவுகள் கொண்டு வந்து தரப்படும்!

எமது இணையவழிச் சேவைகளைப் பயன்படுத்தி பயனைப் _______________ப் பெற்றுக் கொள்ள,

www.suvaiyutu.com / 0049 416 309 25

முகநூல்: சுவையூற்று

இடம்: பேர்லின், யேர்மனி

திறந்திருக்கும் நேரம்: ____________________ 9:30 – 23:00

(5×1=5 புள்ளிகள்)

# பணியகப் பயன்பாட்டுக்கு மட்டும்

| வினா எண் | புள்ளிகள் | முதலாம் முறை | இரண்டாம் முறை | இறுதிப் புள்ளிகள் |
| --- | --- | --- | --- | --- |
| எழுதுதல் | | | | |
| 1 | 25 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 04 | | | |
| 4 | 04 | | | |
| 5 | 04 | | | |
| 6 | 03 | | | |
| **7** | 15 | | | |
| வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் | | | | |
| 1 | 10 | | | |
| 2 | 05 | | | |
| | மொத்தப் புள்ளிகள் | | | |

| | முழுப்பெயர் | கையொப்பம் |
| --- | --- | --- |
| முதலாம் முறை | | |
| இரண்டாம் முறை | | |
| மேற்பார்வையாளர் | | |

மாதிரித் தேர்வத்தாள்